# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

# இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை
# அமுல்படுத்தும் தரங்கள்

(2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச்
சட்டத்தின் 120 வது பிரிவில் வெளியிடப்பட்டது)

**தலைப்பு :** ஆளில்லா விமானச் செயற்பாடுகளுக்காகத் தேவையானவை (ஆளில்லா விமானம், ஆளில்லா விமானத் தொகுதி /தொலைக்கட்டுப்பாட்டு விமானம் / டிரோன்ஷ்)

**இணைப்பு இலக்கம்.** : CA-IS-2016-GEN-001 **SLCAIS: 053** **திகதி**: 2017.01.10

இதற்கு பின்னர் CA சட்டமாக அறிமுகப்படுத்தப்படுவது 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தின் 120 வது பிரிவிற்கமைய CA சட்டத்தின் ஒழுங்கு விதிகள் எதுவும் அல்லது CA சட்டத்தின் உப ஆவணத்தின் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமான சேவை இணக்கப்பாட்டின் பிரமாணக் குறிப்பு உட்பட CA சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோவை அல்லது ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதற்காக அவ்வாறு மேற்கொள்வதற்காக அவசியமானது அல்லது பொருத்தமானது என தாம் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமுல்படுத்தும் தரங்களை வெளியிடும் அதிகாரம் சிவில் விமான சேவைப் பணிப்பாளருக்கு உரியதாகும்.

இதற்கமைய சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகமான எனக்கு CA சட்டத்தின் 80 வது பிரிவின் ஒழுங்கு விதிகளின் கீழ் அல்லது அவ் உப ஆவணத்தின் 08 வது பிரமாணக்குறிப்பில் உள்ளடங்கும் ஒழுங்கு விதிகளின் கீழ் இணக்கத்தின் 02 இணைப்பு வாசத்தில் பணிக்கப்பட்டுள்ள உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளின் கீழ் ஆளில்லா விமானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் வேளையில் பின்பற்ற வேண்டிய இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அமுல்படுத்தும் தரம் (இணைப்பு இலக்கம் : CA-IS-2016 GEN-001 – Att 01 - தலைப்பு : **ஆளில்லா விமானச் செயற்பாடுகளுக்கான தேவை - ஆளில்லா விமான தொகுதி / தொலைக்கட்டுப்பாட்டு விமானங்கள் / (டிரோன்ஷ் போன்றன)** இத்தால் வெளியிடுகிறேன்.

2016 பெப்ரவரி 25 ஆம் திகதி இலக்கம் IS/053 கொண்ட அமுல்படுத்தும் தரத்திற்கு அப்பால் உள்ள இவ் அமுல்படுத்தும் தரம் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் மீள் அறிவித்தல் வரை அதேவாறு அமுலில் இருக்க வேண்டும்.

ஏனைய விடயங்களில் அமுல்படுத்தல் தரத்தை பின்பற்றுவதை தவறுவது குற்றம் எனக் குறிப்பிட்டு CA சட்டத்தின் 3 வது பிரிவு தொடர்பில் தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கிறேன்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை
இல 04, ஹுனுபிட்டிய வீதி,
கொழும்பு 02

எச்.எம்.சி. நிமல்சிறி
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம்
மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி

(இலக்கம் CA-IS-2017 GEN-001 – Att 01 - இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது
**இணைப்பு**

**இலக்கம் SLCAIS- 053 கொண்ட அமுல்படுத்தும் தரம்**
ஆளில்லா விமானச் செயற்பாடுகளுக்கான தேவைகள்
(ஆளில்லா விமானம்/ ஆளில்லா விமானத் தொகுதி /
தொலைக்கட்டுப்பாட்டு விமானம் / டிரோன்ஷ்)

## 1. உரிய தொடர்புடமை

இவ் அமுல்படுத்தும் தரத்தின் மூலம் பணிக்கப்படும் தேவைகள் இதற்குப் பின்னர் பொதுவாக ஆளில்லா விமானமாக கருதப்படும் தொலைக்கட்டுப்பாட்டு விமானம், கம்பி கட்டுப்பாட்டு மாதிரி விமானம், சுதந்திரமாகப் பறக்கும் மாதிரி விமானம் அல்லகு டிரோன்ஷ் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச சட்டத்தின் 80 வது பிரிவு மற்றும் அதன் சட்டத்தின் உப ஆவணத்தின் 8 வது பிரமாணக்குறிப்பில் உள்ளடங்கும் ஒழுங்கு விதிகளின் கீழ் இலங்கை வான்பரப்பிற்குள் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக உரியதாக்கி கொள்ள வேண்டும்.

## 2. அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அல்லது அமைப்புக்கள்

(அ) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்காக அல்லது அவருக்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் ஒன்று அல்லது கூடுதலான எண்ணிக்கையினை மேற்கொள்வதற்காக தொலைக்கட்டுப்பாட்டு விமானத் திட்டமிடல், கட்டியெழுப்புதல் அல்லது செயற்பாடுகள் தொடர்பில் பொருத்தமான நிபுனத்துவத்தை பெற்றுள்ளவர் அல்லது அமைப்பு அதற்கு பின்னர் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக அங்கீகரிக்கப்படுபவர் அல்லது அமைப்பை அங்கீகரிக்க சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு முடியும்.

i. ஆளில்லா விமானச் செயற்பாடுகளுக்காக தொலை முன்னோடி தகைமைச் சான்றிதழ்களை வழங்குதல் அல்லது

ii. ஆளில்லா விமானங்களில் தொலைக்கட்டுப்பாட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நபர்களை நியமித்தல் அல்லது

iii. ஆளில்லா விமானச் செயற்பாடுகள் தொடர்பில் நோடேம் (NOTAM) வெளியிடுவதற்காக விமான போக்குவரத்திற்கு தகவல் சேவை வழங்குனருக்கு அறிவிக்க எவரேனும் ஒருவருக்கு அதிகாரத்தை வழங்குதல் அல்லது

iv. ஆளில்லா விமானத்தை அமைப்பதற்காக அல்லது ஆய்விற்குட்படுத்தும் அதிகாரத்தை ஒப்படைத்தல். அல்லது

v. ஆளில்லா விமானத்தை அமைத்தல், பரிசோதனை செய்தல் மற்றும் அங்கீகரித்தல் அல்லது

vi. ஆளில்லா விமானத்தை செயற்படுத்தும் அதிகாரத்தை வழங்குதல்.

(ஆ) மேற்கூறப்பட்ட ஒழுங்கு விதிமுறைகளைக் கருத்திற்கொள்ளாது நேரடியாக கோரிக்கை சமர்ப்பிப்பவருக்கு அல்லது அமைப்பிற்கு ஆளில்லா விமானத்தை செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்க சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு முடியும்.

(இ) இவ் அமுல்படுத்தும் தரத்தின் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அங்கீகரிக்கப்ட்ட அமைப்பின் நிலைமையினை பெற்றுக் கொள்வதற்காக எதிர்பார்ப்பவருக்கு

அமைப்பிற்கு அல்லது ஆளில்லா விமானத்தை அமைத்தல, செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் ஆளில்லா விமானத்திற்கு பயிற்சியளிப்பது தொடர்பாக அவரின் அனுபவம் மற்றும் தகைமைகளை சமர்ப்பித்து உரிய மாதிரிப்படிவத்தை இதற்காக சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க முடியும்.

**3. ஆளில்லா விமானம் - பங்கு வகைகள்**

இவ் அமுல்படுத்தும் தரத்தின் பணிகளுக்காக ஆளில்லா விமானங்களில் தொடர்புடைய பிரிவினரை அடிப்படையாகக் கொண்ட 04 வகைகளாக வேறுபடுத்தப்படுகின்றன.

| நிறை | ஆளில்லா விமானப் பிரிவு |
|---|---|
| 25 கிலோ கிராம் அல்லது அதனை விட மேற்பட்ட | A |
| 1 கிலோ கிராம் அல்லது அதனை விட மேற்பட்ட 25 கிலோகிராமை விடக் குறைந்த | B |
| 200 கிராமை விடக் மேற்பட்ட இருப்பினும் 1 கிலோ கிராமை விடக்குறைந்த மற்றும் | C |
| 200 கிராம் அல்லது அதனை விடக் குறைந்த | D |

**4. செயற்பாடுகள் தொடர்பான எல்லைகள்**

(அ) A வகை

கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தாலன்றி A வகையின் ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

i. சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அதற்காக வெளியீட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருத்தல்.

ii. ஆளில்லா விமானங்கள் தொடர்பில் உரியதான தனிநபர் அனுமதிப்பத்திரம் விமான செயற்பாடு மற்றும் விமானத் தகைமை தொடர்பில் வெளியிடப்பட்ட சகல தேவைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) B வகை

இவ் அமுல்படுத்தும் தரங்களில் உரிய தேவைகளை பின்பற்றுவதற்குட்பட்டு B வகைக்குரிய ஆளில்லா விமானம்

i. சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர் ஊடாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் ஊடாக பெற்றுக் கொண்ட அதிகாரத்தை ஒப்படைக்கும் திட்டம், உருவாக்குதல் அல்லது பராமரிப்பு மேற்கொள்ள முடியும்.

ii. அத்துடன் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அங்கீரிக்கப்பட்ட நபர் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் பெற்றுக் கொண்ட அதிகாரம் பொறுப்பளிக்கும் செயற்பாட்டின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(இ) C வகை

ஒரு நபருக்கு அல்லது சொத்துக்களின் பாதுகாப்பிற்கு அச்சுத்தல் மேற்கொள்ளப்படும் வேளையில் 3 ஆம் தரப்பினரின் தனிப்பட்ட நிலைமையினை மீறல் அல்லது இயலுமைகள் கொண்ட கமரா, உடலினால் (Body – Sensing) அல்லது சுய செயற்பாடுகள் போன்றவற்றினால் ஆக்கிரமிக்கும் கருவியினை மேற்கொள்வதற்கு இயலுமையற்ற இருப்பினும் அதன் செயற்பாடுகளுக்காகத் தேவையான உபகரணங்களைத் தவிர வேறு பொருட்களைக் கொண்டு செல்வதற்கான இயலுமையும் C வகையின் ஆளில்லா விமானம் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் அப்பணிகளுக்காக உறுதிப்படுத்தப்பட்டுள்ள விற்பனையாளருக்கு பதிவு செய்ததன் பின்னர் அதனை விற்பனையாளரினால் வழங்கப்படும் தீர்மானங்களை பின்பற்றும் அடிப்படையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) D வகை

D வகையின் ஆளில்லா விமானம் உரிய சொத்து உரிமையாளரின் இணக்கத்துடன் தனியார் காணி அல்லது அப்பணிகளுக்காக தெளிவாக இனங்காணப்பட்டுள்ள பொது இடத்தில் அல்லது நபரின் அல்லது சொத்துக்களின் பாதுகாப்பு உட்பட தற்காப்பு தொடர்பில் கருத்திற்கொண்டு அத்துடன் நபரின் தனிப்பட்ட நிலைமைக்கு கௌரவித்து தேவைக்காக அல்லது கல்விச் செயற்பாடுகளுக்காக செயற்பாடுகள் மேற்கொள்வதாயின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி நில மட்டம் தொடக்கம் 150 அடி கொண்ட உயரத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

## 5. விமான விடுவிப்பு

ஒருவருக்கு அல்லது சொத்துக்களுக்கு பாதுகாப்பு அல்லது தற்காப்பு அச்சுறுத்தல் மேற்கொள்வதற்கு தனிப்பட்ட நிலைமையினைக் கருத்திற்கொள்ளாது இயலுமை கொண்ட கமரா, உடல் (self – priming) அல்லது சுய செயற்பாடுகள் மூலம் (Body – Sensing) புள்ளிவிபரங்களை பெற்றுக் கொள்ளல் அல்லது புள்ளி விபரங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் கருவியினை பொருத்தப்பட்டுள்ள எந்தவொரு வகைகளுக்குமுரிய எவையேனும் ஆளில்லா விமானம் கீழ் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர உரிய ஆளில்லா விமானம் பறக்கும் வேளையில் வான் பரப்பிற்குரிய பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச பொலிசரினால் பெற்றுக் கொண்ட விமானச் செயற்பாட்டு விடுவிப்புப் படிவமின்றி விமானங்களை பறக்க விடக்கூடாது.

i. அங்கீகரிக்கப்பட்ட விமானத் தளங்களுக்கு பொறுப்பாகவுள்ளவரினால் பெற்றுக் கொண்ட எழுத்து மூல அங்கீகாரங்களின்றி ஆளில்லா விமானங்களை பறக்க விடல்.

ii. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) இனால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர் எதிர்காலத்தில் ஆளில்லா விமானத்தை செயற்படுத்தல்.

## 6. ஆளில்லா விமானங்களை உற்பத்தி செய்தல், பொருத்துதல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை அல்லது வரி

கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூரணப்படுத்தியிருந்தாலன்றி எவருக்கும் எந்தவொரு பங்குடமை வகைக்குரிய ஆளில்லா விமானங்களைத் தயாரிக்க அல்லது பொருத்துவதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு, இறக்குமதி செய்வதற்கு, விற்பனை, கூலிக்கு, குத்தகைக்காக வழங்கக்கூடாது.

(அ) தேவைக்கு ஏற்றவாறு உரிய நபர் ஆளில்லா விமானத்தை உற்பத்தி செய்திருப்பது பொருத்துதல் மேற்கொண்டிருத்தல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை, கூலிக்கு வழங்குதல் அல்லது குத்தகைக்கு வழங்குவதற்காக CAASL பதிவு செய்திருத்தல்.

(ஆ) உரிய நபர் தாம் உற்பத்திக்காக சேர்க்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும், ஏற்றுமதி செய்யப்படும், விற்பனை, கூலிக்கு வழங்கும் அல்லது குத்தகைக்கு வழங்கும் A,B அல்லது C வகைகளுக்குரிய சகல விற்பனை செய்யப்படும் ஆளில்லா விமானங்களை உரியவாறு சமகாலப்படுத்தப்பட்ட விளக்கமான அறிக்கையினை முன்னெடுத்தல் மற்றும் அவ்வாறான விமானத்தை மூன்றாம் தரப்பினரின் பயன்பாட்டிற்காக வழங்குவதாயின் கீழ் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

i. மூன்றாவது தரப்பினரின் பெயர், முகவரி, அவசர சந்தர்ப்பங்களில் தொடர்பு கொள்ளக் கூடிய முறைகள் தொடர்பிலான தகவல்கள் (மின்னஞ்சல் முகவரி மற்றும் கையடக்கத்தொலைபேசி) மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அறிக்கைப்படுத்தி வைத்திருத்தல்.

ii. ஆளில்லா விமானத்தைத் தயாரிக்கும் வகை / மாதிரி தொடர் இலக்கம் மற்றும் ஏனைய இனங்காணும் முறைகளை அறிக்கைப்படுத்தல்.

iii. ஆளில்லா விமானத்துடன் வழங்கப்படும் கமரா, தொலைக்கட்டுப்பாட்டு மற்றும் ஏனைய உபகரணங்கள் போன்றன மேலதிக பிரிவின் உற்பத்தித் தொடர் இலக்கத்தை அறிக்கைப்படுத்தல்.

iv. C வகை தொடர்பில் மூன்றாம் தரப்பினருக்கு கீழ் குறிப்பிடப்பட்டவாறு தேவையான வகையில் எழுத்து மூலம் அறிவித்தல்.

(அ) செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வகைகளின் ஆளில்லா விமானங்கள் CAASL பதிவு செய்ய வேண்டும்.

(ஆ) ஆளில்லா விமானங்களின் தரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்றவாறு செயற்பாடுகளை மேற்கொள்ளும் வேளையில் அதற்கு பிரதேச பொலிசாரின் விமான போக்குவரத்து விடுவிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 7. ஆளில்லா விமானத்தைப் பதிவு செய்தல்

(அ) ஒரு நபருக்கு அல்லது சொத்துக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அல்லது தற்காப்பிற்கு அச்சுறுத்தல் மேற்கொள்பவர் அல்லது தனிப்பட்ட நிலைமை தொடர்பிலான உரிமையை மீறுதல் அல்லது இயல்புபூர்வமான கமரா, சுய மதிப்பீடு (self- priming) வியூகத் திட்டங்கள் போன்ற புள்ளி விபரங்களை ஆக்கிரமித்தல் அல்லது மீளப் பெற்றுக் கொள்ளும் கருவி எவையேனும்

பொருத்தாதுள்ள வகைக்குரிய ஆளில்லா விமானத்தைப் பதிவு செய்யும் அதிகாரத்தை பெற்றுள்ள அதன் விற்பனையாளருடன் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) A- வகைக்குரிய அல்லது B வகைக்குரிய ஆளில்லா விமானம் CAASL உடன் பதிவு செய்திருக்க வேண்டும்.

(இ) A - வகைக்குரிய ஆளில்லா விமானத்தை பதிவு செய்யும் தேவை எந்தவொரு அதிகாரத்தையும் பயன்படுத்தி விமானத்தைப் பதிவு செய்வதனை பூரணப்படுத்த வேண்டும் என்ற தேவைக்கேற்றவாறு இருக்க வேண்டும்.

(ஈ) நபர் ஒருவருக்கு அல்லது சொத்துகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் அல்லது தற்காப்பு அச்சுறுத்தல் விடுக்கப்படும் போது உரிமைகளை மீறல் அல்லது இயலுமை கொண்ட கமரா உடல் ரீதியிலான (Body- Sensing) உபாயம் போன்ற புள்ளி விபரங்களைத் திரட்டல் அல்லது மீள பெற்றுக் கொள்ளக்கூடிய கருவிகள் பொருத்தாதுள்ள போதிலும் C- வகைக்குரிய ஆளில்லா விமானத்தைப் பதிவு செய்வதற்குரிய அதிகாரத்தை பெற்றுள்ள அதன் விற்பனையாளர்களுடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

(உ) நபர் ஒருவருக்கு அல்லது சொத்துகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் அல்லது தற்காப்பு அச்சுறுத்தல் விடுக்கப்படும் போது உரிமைகளை மீறல் அல்லது இயலுமை கொண்ட கமரா உடல் ரீதியிலான (Body- Sensing) உபாயம் போன்ற புள்ளி விபரங்களைத் திரட்டல் அல்லது மீள பெற்றுக் கொள்ளக்கூடிய கருவிகள் பொருத்தாதுள்ள போதிலும் D- வகைக்குரிய ஆளில்லா விமானத்தைப் பதிவு செய்வதற்குரிய அதிகாரத்தை பெற்றுள்ள அதன் விற்பனையாளர்களுடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

(ஊ) அந்தந்த நிலைமைகளுக்கமைய குறுகிய காலத்திற்காக வெளியிடக்கூடிய தற்காலிக சாதன்றிதழ்களுக்கமைய ஆளில்லா விமானத்திற்காக வெளியிடப்படும் பதிவு செய்யும் சான்றிதழ்களை இரண்டு வருட காலத்திற்காக செல்லுபடியாகுவதை அதற்குப் பின்னர் புதுப்பிக்க முடியும்.

(எ) ஆளில்லா விமானத்தின் உரிமையாளர் அவ் ஆளில்லா விமானம் எம்முறையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பில் ஆளில்லா விமான தொலைச்செயற்பாட்டிற்கு சகல சந்தர்ப்பங்களிலும் அல்லது பதிவுச் சான்றிதழ்களை வைத்திருக்குமாறு உறுதிப்படுத்த வேண்டும்.

(ஏ) நபர் ஒருவருக்கு அல்லது சொத்துக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படும் வேளையில் அல்லது தனிப்பட்ட நிலைமைகளுக்கு உரிமைகளை மீறும் வேளையில் இயலுமை கொண்ட கமரா உடல் ரீதியிலான (self- priming) உபாய போன்ற புள்ளி விபரங்களைத் திரட்டல் அல்லது மீள பெற்றுக் கொள்ளக்கூடிய கருவிகள் பொருத்தப்பட்டுள்ள A,B அல்லது C வகையை போன்று D வகைக்குரிய எவையேனும் ஆளில்லா விமானம் CAASL இற்கு அவசியமாயின்

அவ்விமானத்தை பதிவு செய்வதற்கான தேவையினை பரிசீலனை செய்வதற்காக CAASL இற்கு அல்லது பெயரிடப்பட்ட நபர் / அமைப்பிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஐ) மீள்பதிவு : பதிவினை இரத்துச் செய்தல் பதிவு செய்யப்பட்ட ஆளில்லா விமானம் நிரந்தரமாக சேதமடைந்த வேளையில் அல்லது இலங்கைக்கு செயற்பாடுகளை மேற்கொள்வது முழுமையாக நிறுத்தப்படும் பட்சத்தில் அல்லது அவ்விமானத்தின் உரிமையாளர் அது தொடர்பாக சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

**8. ஆளில்லா விமானங்களைச் செயற்படுத்துவர்களை பதிவு செய்தல்**

(அ) A,B அல்லது C பிரிவுகளுக்குரிய ஆளில்லா விமானங்களை செயற்படுத்தல் அல்லது அவ்வாறு செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் நபருக்கு CASSL இனால் அல்லது வேறு ஏதேனும் பெயரிடப்பட்ட நபருக்கு அல்லது அமைப்பினால் நடாத்தப்படும் இயலுமைகளை பரிசீலனை செய்து வெற்றிகரமான பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் அதற்காக உரிய கட்டணத்தை செலுத்தி தொலை முன்னோடி அதிகாரத்தை வழங்கும் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) A,B அல்லது உரிய வகைக்குரிய ஆளில்லா விமானம் தொலைக் கட்டுப்பாட்டு விமானி, சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வேறு முறையில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலன்றி 18 வயதை விடக் கூடியவராக இருக்க வேண்டும்.

(இ) A,B அல்லது C வகைக்குரிய ஆளில்லா விமானம் தொலைக்கட்டுப்பாட்டு விமானியின் விமான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக CASSL இற்கு அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தாலன்றி அவரின் அதிகாரத்தை ஒப்படைக்கும் சான்றிதழுக்கு அதற்காக உரிய கட்டணத்தை செலுத்தி 02 வருடங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) ஆளில்லா விமானம் இலங்கை பிரஜை அல்லாத தொலை விமானியின் உரிமையினை பெற்றிருப்பின் குறிப்பிட்ட கால எல்லைக்காக செல்லுபடியாகக் கூடியவாறு CAASL உடன் மேற்கொள்ளும் தற்காலிக பதிவுக்கு மாத்திரமாகும்.

**9. அடையாளம்காணும் முத்திரை**

(அ) A,B அல்லது C வகைக்குரிய ஆளில்லா விமானம் சிவில் விமான சேவைப் பணிப்பாளரினால் அல்லது அவரினால் உரியவாறு அதிகாரம் வழங்கப்பட்ட நபருக்கு அல்லது அமைப்பினால் வெளியிடப்பட்ட இனங்காணும் முத்திரை இல்லாமல் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திற்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படக்கூடாது.

(ஆ) ஆளில்லா விமானத்தின் மீது காட்சிப்படுத்தப்படும் இனங்காணும் முத்திரை விமானத்தின் பதிவிலக்கம், உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அவரின் அவசர அழைப்பு இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும்.

**10. வர்த்தகச் செயற்பாடுகளுக்காக ஆளில்லா விமானங்களை செயற்படுத்தல்.**

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தனித்தனியாக மேற்கொள்வதினை அடிப்படையாகக் கொண்டு உரிய கட்டணத்தினை செலுத்தி சிவில் விமான சேவைப் பணிப்பாளரினால் அதற்காகப் பெற்றுக் கொண்ட விசேட அங்கீகாரம் இன்றி எந்தவொரு வகைக்குரிய ஆளில்லா விமானங்களையும் வாடகைக்காக அல்லது பிரதிலாபத்திற்காக செயற்படுத்தக்கூடாது.

**11. விமானச் செயற்பாடுகளுக்காக ஆளில்லா விமானங்களை செயற்படுத்தல்.**

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தனித்தனியாக மேற்கொள்வதனை அடிப்படையாகக் கொண்டு உரிய கட்டணத்தை செலுத்தி சிவில் விமான சேவை பணிப்பாளர் மூலம் பெற்றுக் கொண்ட விசேட அங்கீகாரம் இன்றி எந்தவொரு வகைக்குரிய ஆளில்லா விமானங்களையும் பறக்க விடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளக்கூடாது.

**12. கம்பிக் கட்டுப்பாட்டு மாதிரி விமானங்கள்**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட முன் அங்கீகாரமின்றி 30 மீற்றரை விட நீளமாக ஒற்றை அல்லது பல கம்பித் தொகுதிகளுடன் கம்பி கட்டுப்பாட்டு மாதிரி விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

**13. ஆளில்லா விமானங்களின் பாதுகாப்பினைச் செயற்படுத்தல்.**

(அ) நபர் அல்லது சொத்துக்களுக்கு விபத்துக்கள் இன்றி பாதுகாப்புடனான செயற்பாட்டை உறுதிப்படுத்த எதிர்பார்க்கப்பட்டவாறு பறப்பதற்கு முன்னர் உரிய விமானத்தின் அசைவு முறைகள் சக்தி மற்றும் கட்டளைகள் மற்றும் நிருவாகம் போன்ற பொதுவான செயற்பாடுகளை பரிசீலனை செய்து ஆராய்ந்த பின்னர் அன்றி எந்தவொரு வகைக்குமுரிய ஆளில்லா விமானங்களையும் பறக்க விட இடமளிக்கக்கூடாது.

(ஆ) ஆளில்லா விமானங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொலைக்கட்டுப்பாட்டு உபகரணங்கள் போன்ற வெளி உபாய பாதுகாப்புக்கள் காணப்படுவதாகவும் அதில் விமானத்தின் பறக்கக்கூடிய முறை அல்லது கட்டுப்படுத்தக்கூடிய இயலுமைக்கு பாதக அழுத்தங்கள் இல்லை என உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) ஆளில்லா விமான தொலைச் செயற்பாடுகளை மேற்கொள்பவர் சகல சந்தர்ப்பங்களிலும் செயற்பாட்டு இடம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வான் பரப்பு மார்க்கம் தொடர்பில் விழிப்பினைப் பேண வேண்டும். செயற்பாட்டு பிரதேசத்தைக் காணக்கூடிய வகையில் வேறு விமானங்கள், தனிநபர் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டியதுடன் மோதல்களை தவிர்க்குமாறும் வேறு விமானங்களுக்கு ஆளில்லா விமானங்களை தவிர்ப்பதற்காக

செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதினை தடுக்கக்கூடியவாறு தமது விமானங்கள செயற்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) ஆளில்லா விமானம் கவனயீனமாக மற்றும் பாதுகாப்பற்ற முறையில் பறக்கக்கூடாது.

(உ) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வேறு முறையிலன்றி அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் மாத்திரம் விமானம் 87 (87 Knots) (மணிக்கு 100 கிலோமிற்றரை) விட வேகத்தில் பறக்கக்கூடாது.

(ஊ) தீடீர் காற்று, மழை, இடிமின்னல் தாக்கம் அல்லது வேறு பாதிப்புமிக்க காலநிலையின் கீழ் 5 கிலோமிற்றர் அளவேனும் தழ் இறங்கியுள்ள வேளையில் ஆளில்லா விமானத்தை செயற்படுத்தக்கூடாது.

(எ) ஆளில்லா விமானம் தொலைவில் செயற்படுத்தப்படும் நபர் ஏதேனும் உரிய நேரத்தில் ஆளில்லா விமானம் ஒன்றை விட மேற்பட்ட எண்ணிக்கையினை ஒரே தடவையில் செயற்படுத்தக்கூடாது.

(ஏ) அசையும் வாகனம் அல்லது அசையும் மண்டபத்திலிருந்து ஆளில்லா விமானத்தை செயற்படுத்தக்கூடாது.

(ஐ) விமான விபத்து போன்ற அவசர சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்டவாறு முன்னர் கானாத பாரிய சம்பவங்கள் அல்லது அவசர நிலைமைகள் ஏற்படும் வேளையில் அவ்வறு தேவையான அவசர செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியது ஆட்களுக்கு காயம் அல்லது சொத்து சேதம் ஏற்படாத முறையிலாகும்.

(ஒ) ஆளில்லா விமானத்தை செயற்படுத்தும் போது அவ்வாறு விமானம் தொலைசெயற்பாட்டு நபர், இக்கோவைக்கு உட்பட்டு செயற்பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்பாடுகள் நிருவகிக்கப்பட்டு ஏனைய உரிய சகல சட்டங்களையும் பின்பற்ற வேண்டும்.

**14. ஆளில்லா விமானத்தை செயற்படுத்தும் நபரின் நிலைமை**

கீழ்க் குறிப்பிடப்பட்ட நிலைமைகளுக்குப் பின்னர் எந்தவொரு நபரும் ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

(அ) செயற்பாடுகள் மற்றும் விமானத்தை பாதுகாப்பாக செயற்படுத்துவது தொடர்பில் அறிவு இல்லாதிருப்பின்

(ஆ) சிறந்த தேகாரோக்கியம் மற்றும் மனோநிலை சுகாதாரம் இல்லாதிருப்பின்

(இ) மதுபோதையில் இருப்பின் அல்லது மனோநிலை பாதிக்கப்பட்டிருப்பின்

(ஈ) சமூகப் பொறுப்புக்கள் தொடர்பில் உறுதியான உணர்வு இன்றியிருப்பின்

**15. மூன்றாம் தரப்பினரின் சமூக உரிமை தொடர்பில் ஆளில்லா விமான தொலைச் செயற்பாட்டு நபர்களின் பொறுப்புக்கள்**

தொலைத்தொடர்பு கம்பம் (Telemetry) உபாய அடிப்படையில் பொருத்தப்பட்ட ஆளில்லா விமானத்தை செயற்படுத்தும் வேளையில் ஆளில்லா விமானத்தை தொலைச் செயற்பாட்டை மேற்கொள்ளவும் சகல சந்தர்ப்பங்களிலும் அவர் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பார் அன்றி திட்டமிடப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் மாத்திரம் காண்பிக்க வேண்டியதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மூன்றாம் தரப்பினரின் சிவில் நிலைமைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுத்துவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**16. செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட பிரதேசம்**

(அ) இவ் அமுல்படுத்தும் தரங்கள் மூலம் வேறு முறையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலன்றி உரிய இடத்திற்கு பொறுப்பான விமானக் கட்டுப்பாட்டு பிரிவின் மூலம் பெற்றுக் கொண்ட அங்கீகாரம் இன்றி C,D அல்லது E பிரிவின் விமான வான் பரப்பிற்குள் ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

(ஆ) அவ்வாறு முன்னாள் குறிப்பிட்டாலன்றி கீழ் குறிப்பிடப்பட்ட விமானத் தளங்கள் விசேடமாக எல்லையிலிருந்து 5 மைல் தூரம் அல்லது அதற்குள் ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

(i) கட்டுப்பாடற்ற விமானத் தளங்கள்

(a) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் மற்றும் விமான செயற்பாட்டாளருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையுடன் செயற்பாடுகளை மேற்கொள்ள பொறுப்பேற்பதாக அன்றி மற்றும்

(b) சுதந்திரமான வன்பரப்பு மாதிரி விமானம் தொடர்பில் தொடர்ச்சியான விமான ஓடுபாதையில் காற்றுக்கு விமானங்களை பறக்கச் செய்வதற்கு ஆரம்பிப்பதாகவிருந்தாலன்றி மற்றும்

(c) தொலைக்கட்டுப்பாட்டு விமானம் தொடர்பான செயற்பாடுகளின் போது

i. ஆளில்லா விமானங்கள் பறக்கும் போது அதனை மேற்பார்வை செய்ய விமான தொலைச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு நபரினதும் மேற்பார்வையாளராக இருந்தாலன்றி மற்றும்

ii. சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் வேறு முறையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி ஆளில்லா விமானம் நில மட்டத்திலிருந்து 150 அடிக்கு மேல் உயரமாக பறப்பதாக இருந்தாலற்றி

(ii) கட்டுப்பாடு கொண்ட விமானத் தளம் - உரிய விமானக் கட்டுப்பாட்டுப் (ATC) பிரிவின் மற்றும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் பெற்றுக் கொண்ட அதிகாரத்தை வழங்குவதற்கமைவாக ஆளில்லா விமானத்தை செயற்படுத்துவதாயின் மற்றும்

(iii) எந்தவெரு விமானத் தளம் - ஆளில்லா விமானம் தொலைச்செயற்பாட்டு நபர் அதற்காக சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரத்தை பெற்றிருந்தால் மற்றும்

(a) இந்நபர் அங்கீகரிக்கப்பட்ட நபர் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் வெளியிடப்பட்ட தொலைமுன்னோடி தகைமை சான்றிதழை கொண்டிருத்தல் அல்லது அவ்வாறான சான்றிதழை வைத்திருப்பவரின் நேரடி மேற்பார்வையில் செயற்படுதாயின் அல்லது

(b) அந்நபர் அங்கீகரிக்கப்பட்ட நபரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் அல்லது விமானி அல்லாத விமானச் செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நபரினால் அல்லது நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுவதாயின் அல்லது.

(c) இந்நபர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட விமான அனுமதிப்பத்திர சான்றிதழை கொண்டவராயின்

(இ) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வேறுமுறையில் அதிகாரம் வழங்கப்பட்டாலன்றி ஆளில்லா விமானங்கள் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் கீழ் குறிப்பிடப்பட்டவாறு செயற்படக்கூடாது.

i. செயற்படக்கூடிய விமானத்தளத்தின் அசையக்கூடிய பிரதேசம் அல்லது அதற்கு மேலால்.
ii. ஏதேனும் செயற்படும் ஓடு பாதை பிரதேசத்தின் மீது அல்லது அதற்கு மேலால்.
iii. மக்கள் கூட்டத்திற்கு அல்லது பொதுக்கூட்டத்திற்கு மேலால்.
iv. நெருசல் கொண்ட பிரதேசத்திற்கு மேலால்.
v. நெடுஞ்சாலை அல்லது புகையிர வீதி அல்லது அதற்கு மேலால்.
vi. திறந்த மின்கம்பிக்கு கீழால் அல்லது அதற்கு மேலால்.
vii. தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு அருகாமையில்.
viii. அங்கீகாரமின்றி தேசிய வனப் பூங்கா மற்றும் தொல்பொருளியல் தளங்களுக்கு மேலால் மற்றும் பாதுகாப்புக் பிரதேசங்களுக்கு அல்லது பாதுகாப்பு நிறுவனங்களுக்கு மேலால்.

(ஈ) கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் 16 (ஆ) பிரிவு தொடர்பு அற்றதாகும்.

i. விமானத் தள எல்லைக்கு வெளியே
ii. விமானம் பறப்பதைத் தடுக்கும் இயலுமை கொண்ட தடவைகள் மூலம் இயற்கை விமானத்தளங்களிலிருந்து வேறுபட்ட வான்பரப்பு

**17. வான்பரப்பு**

(அ) கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

i. ஏதேனும் சொத்தில் வதியக்கூடிய நபர் அச்சொத்தின் உரிமையாளரினால் வெளியிடப்பட்ட முன் அங்கீகாரத்தை பெற்றிருந்தாலன்றி அச்சொத்துக்கு மேலால்.

iii. மூன்றாம் தரப்பினர் அல்லது அவரின் சொத்துக்களுக்கு பாதுகாப்பு அல்லது தற்காப்பிற்கு பாதிப்புக்கள் ஏற்படும் வேளையில்

iv. விமானியற்ற விமானங்களை செயற்படுத்துவதற்கான விமானப் பறப்பிற்குரிய செயற்பாடுகள் வேறு விமானங்கள் தொடர்பில் மேற்பார்வைகளை மேற்கொள்ளாது.

v. 16(ஈ) வாசகத்திற்கு அமைவாக அன்றி நில மட்டத்திலிருந்து 150 அடியை விடக் கூடிய உயரத்தில்

(ஆ) விமானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரங்களை வழங்குவதன் அடிப்படையில் அன்றி 16 (ஆ)(i) வாசகத்தின் ஒழுங்கு விதிமுறைகள் எதுவும் உரியதாக அமையாது.

(இ) கீழ் குறிப்பிடப்பட்டவாறு செயற்பாடுகளை மேற்கொள்வதாயின் ஆளில்லா விமானத் தளங்களிலிருந்து 5 மைலுக்கு மேற்பட்ட தூரத்தினால் மற்றும் நில மட்டத்திலிருந்து 150 அடிக்கு மேற்பட்ட உயரத்தினால் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

i. செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது அப்பணிகளுக்காயின் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டுப் பிரதேசமாயின் அல்லது

ii. செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது C,D மற்றும் E பிரிவின் வான் பரப்புக்களாயின் குறைந்தபட்சம் செயற்பாட்டுக்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட நபரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் அதிகாரம் வழங்கப்பட்ட நபருக்கு நோடேம் (NOTAM) வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்கள் விமான தகவல் சேவை வழங்குனருக்கு அறிவிப்பதாயின்.

a. ஆளில்லா விமான தொலைச் செயற்பாட்டு நபரின் பெயர் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்.
b. உத்தேச செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடம்
c. உத்தேச செயற்பாட்டுத் திகதி, நேரம் மற்றும் அமுலிலுள்ள கால எல்லை.
d. உத்தேச செயற்பாடுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட நில மட்டத்திலிருந்து உயர்ந்த பட்ச அளவு

**18. வீதி உரிமை**

அ. ஆளில்லா விமானம் தொலைவில் செயற்படுத்துபவர் சகல சந்தர்ப்பங்களிலும் அவ் ஆளில்லா விமானம் நிலத்தில் மற்றும் பறக்கும் போது ஆட்களுடன் விமானத்திற்கு மார்க்க உரிமையினை

வழங்குவதாகவும் அதில் ஆட்கள் அற்ற விமானத்திலிருந்து தொலைவில் இருப்பதாகவும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஆ. சுதந்திரமாக விமான போக்குவரத்து மாதிரி விமானச் செயற்பாடுகள் மேற்கொள்பவர் விமானத்தின் போக்குவரத்துச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முன்னர் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வேளையிலும் தமது விமானம் நில மட்டத்தில் அல்லது பறக்கும் போது அல்லது ஆட்கள் கொண்ட சகல விமானத்திலும் தொலைவில் இருப்பதாக உறுதிப்படுத்த வேண்டும்.

இ. ஆளில்லா விமானம் தொலைவில் செயற்படுத்தும் நபர் தமது விமானியற்ற விமானம் நிலத்தின் மீது இருப்பதாக அல்லது நீரின் மீது இருப்பதாக சகல அசையும் பொருட்களுக்கும் வீதியை வழங்குவதாக உறுதிப்படுத்த வேண்டும்.

ஈ. ஆளில்லா விமானத்தை தொலைவிலிருந்து செயற்படுத்துபவர் அது ஆளில்லா விமானத்தில் நபர்கள், மிருகங்கள், பறவைகள் மற்றும் சொத்துக்களிலிருந்து தொலைவில் இருப்பதாக உறுதிப்படுத்த வேண்டும்.

**19. பொருட்களை வீசுதல் அல்லது சாகசக் கண்காட்சிகளை நடாத்துதல்.**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அல்லது அதற்காக அங்கீகாரம் பெறாது விமானியற்ற விமானம் ஏதேனும் ஒன்றை வீசுதல் அல்லது விமானம் தொடர்பான சாகச நிகழ்வுகளை நடாத்தக்கூடாது.

**20. இழுத்துக் கொண்டு செல்லல்.**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் பெற்றுக் கொண்ட உரிய அங்கீகாரம் இன்றி சேவையில் ஈடுபடும் ஆளில்லா விமானத்தை எவரும் இழுத்துக் கொண்டு செல்ல முடியாது.

**21. ஏதேனும் பொருளைக் கொண்டு செல்லல்.**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் பெற்றுக் கொண்ட உரிய அங்கீகாரமின்றி ஆளில்லா விமானத்தில் எந்தவொரு பொருளையும் கொண்டு செல்லக்கூடாது.

**22. கற்புலனாக்கூடிய வரைபுச் செயற்பாடுகள்**

(அ) கீழே குறிப்பிட்ட இடங்களில் மற்றும் நிலைமைகளின் கீழ் ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

i. விமானச் செயற்பாடுகள் வான் பரப்பிற்கு அண்மித்த காட்சி விமானத்தை செயற்படுத்தும் நபருக்கு தென்படுபவருக்கு தடைகள் உள்ள பிரதேசத்திற்கு மேலால்.

ii. ஏற்றப்பட்ட நிலம், கட்டடம் அல்லது வேறு இடத்திலிருந்து ஏற்றப்படல்

iii. விமானம் கற்புலனாகுவதை பேணுவதற்காக அச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நபருக்கு காணப்படும் இயலுமைகளுக்கு தடைகள் ஏற்படக்கூடிய நிலைமைகளின் கீழ்.

(ஆ) ஆளில்லா விமானங்களை செயற்படுத்தும் நபர் சகல சந்தர்ப்பங்களிலும்

i. ஆளில்லா விமானத்துடன் கற்புலனாக்கூடிய வரைபடத்தைப் பேண வேண்டும்.

ii. ஆளில்லா விமானம் பறக்கும்போது வான்பரப்பினை காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

iii. ஆளில்லா விமானம் மேக கூட்டங்களுக்கு கீழே செல்வதை பேண வேண்டும்.

(இ) இவ் அமுல்படுத்தும் தரத்தின் பணிகளுக்காக கட்புலனாகும் காட்சிகளைக் கொண்ட வரைபு எனக்கருதப்படுவது இவ் வரைபின் ஊடாக மேற்பார்வையாளருக்குத் தெளிவான காட்சி தென்படக்கூடியவாறு நேரடியாக வரைபு என்பதுடன் அதில் கீழ் குறிப்பிடப்பட்டவைகளை பயன்படுத்த முடியும்.

i. மூக்குக் கண்ணாடி, தொலைக்காட்டி, போன்றவற்றை பயன்படுத்துவதாயின் குறைந்தபட்சம் தென்படக்கூடிய சாதாரண அளவை விட அதிகமான அளவு வரை சரியாக சமமான வியூகங்கள் (இலத்திரணியல் இயந்திரம், இலத்திரணியல் உபகரணங்கள், வெளியீட்டு மற்றும் இலத்திரணியல் வெளியீட்டு உபகரணங்களைப் பயன்படுத்துவதன்றி) அல்லது முதல் நபரின் காட்சி (FPV) அல்லது

ii. கீழ் குறிப்பிட்டவைகளை பேணுதல் மற்றும் பயிற்சி உட்பட தேர்ச்சி கொண்ட மேற்பார்வையாளர்

a. விமானத்தின் கற்புலனாகும் வரைபு
b. விமானியற்ற விமானத்தை செயற்படுத்தும் வான்பரப்பின் காட்சி
c. ஆளில்லா விமானத்தை செயற்படுத்தும் நபருடன் நேரடித் தொடர்பாடல்

**23. இரவு நேர விமானச் செயற்பாடுகள்**

இருள் சூழ்ந்த பின்னர் சூரியன் உதித்து 20 நிமிடத்திற்கு முன்னர் வரையான காலத்திற்குள் மேற்கூறப்பட்டவாறு அன்றி ஆளில்லா விமானங்களைச் செயற்படுத்தக்கூடாது.

(அ) போதியளவு வெளிச்சம் உள்ளே இருக்கும் வேளையில்.

(ஆ) போதியளவு வெளிச்சத்துடன் தளுவக்கூடிய செயற்பாடுகளுக்காக.

(இ) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட உரிய அதிகாரத்தினை வழங்குவதன் அடிப்படையில்.

**24. விமானப் போட்டிகள்**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட விசேட அங்கீகாரம் இன்றி ஆளில்லா விமானங்களை போட்டிகளுக்குட்படுத்தல் அல்லது வேறு முறையில் போட்டிகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது.

**25. மாற்றியமைத்தல்**

ஏற்கனவே சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள விமானி அல்லாத விமானத்தை மாற்றியமைப்பதற்காக அங்கீகாரமின்றி நடவடிக்கை எடுக்கக்கூடாது.

**26. வானொலி குறுக்கீடுகள்**

வானொலி தொடர்பாடல், வானொலிக்கு மற்றும் விமான பயண முகாமைத்துவ தொகுதிக்கு பாதிப்புக்கள் ஏற்படதவாறு ஆளில்லா விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

**27. விபத்து / சம்பவத்தினை அறிக்கைப்படுத்தல்.**

ஆளில்லா விமானங்களை தொலைக்கட்டுப்படுத்துபவர் ஏதேனும் ஆளில்லா விமானத்தை செயற்படுத்தும் போது தனிப்பட்ட ரீதியில் பொதுச் சொத்துக்களுக்கு அழிவுகள் அல்லது மூன்றாம் தரப்பினருக்கு ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு அல்லது அவ்வாறான சம்பவம் இடம்பெறாத, சம்பவம் இடம்பெற்ற அண்மித்த பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிக்கைப்படுத்த வேண்டும்.

ஆளில்லா விமான உரிமையாளர் / தொலைச்செயற்பாட்டு நபர் முடியுமானளவு துரிதகதியில் சம்பவம் இடம்பெற்றது முதல் 48 மணித்தியாலத்திற்கு மேற்படாது தாமதமின்றி அச்சம்பவம் தொடர்பான அறிக்கையினை CASSL இற்கு வழங்க வேண்டும். இவ் அறிக்கையில் கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

(1) உரிமையாளரின் பெயர் மற்றும் அதனைத் தொடர்புபடுத்தக்கூடிய முறைகள்
(2) செயற்பாட்டாளரின் பெயர் மற்றும் அதனைத் தொடர்புபடுத்தக்கூடிய முறைகள்
(3) ஆளில்லா விமானத்திற்காக வழங்கப்பட்ட பதிவுத் தகவல்கள்
(4) விபத்து இடம்பெற்ற இடம்
(5) விபத்து இடம்பெற்ற திகதி
(6) விபத்து இடம்பெற்ற நேரம்
(7) காயமடைந்தவர் / காயத்தின் அளவு மற்றும் அது தொடர்பான விளக்கங்கள்
(8) இழப்பீடுகள் ஏற்பட்ட சொத்துக்களின் அளவு. அவ்வாறு இடம்பெற்றிருப்பின் அது குறித்த விளக்கமான அறிக்கை
(9) இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலான அறிக்கை

**28. விடுவித்தல்**

கண்டுபிடித்தல் மற்றும் மீட்டல், விமான விபத்து மற்றும் தேசிய தொழில்முயற்சி போன்ற சந்தர்ப்பங்களில் பொது அமைப்புக்களினால் அமுல்படுத்தப்படும் மனிதாபிமான நிவாரனச் செயற்பாடுகளை அமுல்படுத்தும் தரங்கள் கொண்ட தேவைகளிலிருந்து விடுவிப்பதற்கான சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் ஒழுங்குவிதிமுறைகள்.

**29. காப்புறுதித் தழுவல்**

குறைந்தபட்சம் மூன்றாம் தரப்பினரின் காயம் மற்றும் இழப்பீட்டுக்காக பெற்றுக் கொண்ட செல்லுபடியாகும் காப்பறுதித் தழுவலை கொண்ட A,B அல்லது C வகைகளுக்குரிய ஆளில்லா விமானங்களைச் செயற்படுத்தக்கூடாது.

**30. கரைக்கப்பால் செயற்பாடுகளை மேற்கொள்வதைத் தடுத்தல்.**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி இலங்கைக்குரிய உள்நாட்டு கடற்பரப்பிற்கு ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்த கரைக்கப்பால் செயற்பாடுகள் (Off Shore Operatios) மேற்கொள்ளக்கூடாது.

**31. விடுவிக்காதிருத்தல்**

ஆளில்லா விமானங்களை செயற்படுத்துவதற்கு சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் காரணமாக உரிய செயற்பாட்டாளருக்கு செயற்பாட்டுப் பிரதேசம் / செயற்பாட்டுத் திகதி / நேரம் / அல்லது எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளின் நிலைமைகளுக்கமைய வேறு அமைச்சினால், அதிகார சபையினால், சபையினால், முகவர் நிறுவனத்தினால் அல்லது அவ்வாறான அமைப்புக்களினால் பெற்றுக் கொள்ளக்கூடிய அங்கீகாரத்திலிருந்து விடுவிக்கப்படமாட்டாது.

**- முற்றும் -**